


11. 08. 2025

தலைப்பு செய்திகள்

- நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற அரசின் உணர்வை முன்னெடுத்துச்செல்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறினார்.
- வன விலங்கு வசிப்பிடங்கள் மேம்பாடு மற்றும் மேலாண்மைக்காக மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் நிதி உதவி அளிப்பதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் மக்களவையில் தெரிவித்தார்.
- திருப்பூரில் ஆயிரத்து 426 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசின் வளர்ச்சி திட்ட பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.
- தமிழ்நாட்டில் போதை பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக மாநில இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு.ரகுபதி தெரிவித்துள்ளார்.
- பல்கேரியாவில் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் Aryan Shah – பல்கேரியாவின் Alexander Donski-யை இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

*********

பிரதமர்

21ஆம் நூற்றாண்டில் இந்தியா வள்ச்சியை முன்னிலைப்படுத்தும் பொறுப்புடன் செயலாற்றி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக நவீன வசதிகளுடன் கூடிய 184 வீடுகளுடன் கட்டமைக்கப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை இன்று திறந்துவைத்து பேசிய பிரதமர் கடந்த 10 ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக 350 இல்லங்கள் கட்டப்பட்டதாக தெரிவித்தார்.

கடந்த 2004ம் ஆண்டுமுதல் 2014 ஆம் ஆண்டு வரை உறுப்பினர்களுக்காக புதிய இல்லம் எதுவும் கட்டப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

"ஒரே பாரதம் உன்னத பாரதம்" என்ற அரசின் உணர்வை பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரே இடத்தில் வசிக்க வகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

கிருஷ்ணா கோதாவரி, கோசி, ஹுக்ளி ஆறுகளின் பெயருடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த குடியிருப்புகள் ஒற்றுமையை பறைசாற்றுவதாக கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஒரே குழுவாக செயலாற்றி தேசத்திற்கு முன்மாதிரியாக இருப்பார்கள் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த குடியிருப்பு வளாகத்தில் சூரிய சக்தி கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறிய அவர், இதன் அடிப்படையில் நிலையான வளர்ச்சியுடன் கூடிய புதிய சாதனைகள் எட்டப்படும் என்று கூறினார்.

எரிசக்தி பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, திடக்கழிவு மேலாண்மை, மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த வசதிகள் போன்றவற்றை உள்ளடக்கி சுற்றுச்சூழலுக்கு உகந்த தன்மையுடன் இவ்வீடுகள் உருவாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

நிலநடுக்கத்தை தாங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த கட்டிடங்கள் நவீன வடிவமைப்புகளுடனும், விரிவான பாதுகாப்பு வசதிகளுடனும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

180க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஒரே இடத்தில் வசிப்பதால் பொருளாதார ரீதியில் அரசுக்கு மிகவும் பயனளிக்கும் என்று கூறிய அவர், ஒரே இடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்புகள் இல்லாத காரணத்தால் அரசுக்கு கூடுதல் செலவு ஏற்பட்டதாக பிரதமர் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக ஆபரேசன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில் அங்கு மரக்கன்றையும் பிரதமர் நட்டுவைத்தார்.

*********

நாடாளுமன்றம்

பீஹார் வாக்காளர் பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

இரு அவைகளும் இன்று கூடியவுடன் பீகார் வாக்காளர் பிரச்சனை குறித்த விவாதங்களை வலியுறுத்தி எதிர்கட்சியினர் அமளியில் ஈடுபட்டனர்.

கடந்த 14 நாட்களாக மக்களவையில் அவை அலுவல்கள் நடைபெறாதது குறித்து கவலை தெரிவித்த அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா ஜனநாயக ரீதியில் இது ஏற்புடையது அல்ல என்று குறிப்பிட்டார்.

இதனிடையே மக்களவையில் கூச்சல் குழப்பங்களுக்கு இடையே ஒருங்கிணைந்த வன உயிரின வசிப்பிட மேம்பாடு திட்டம் குறித்த கேள்விக்கு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் பதில் அளித்தார்.

மக்களவை தலைவரின் தொடர் வேண்டுகோளுக்கு செவிமடுக்காமல் உறுப்பினர்கள் அமளியில் தொடர்ந்து ஈடுபட்டதால் மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே நிலைமை காணப்பட்டதால் அவை துணை தலைவர் திரு.ஹரிவன்ஷ் அவையை பிற்பகல் வரை ஒத்திவைத்தார்.

இதனிடையே எதிர்கட்சி உறுப்பினர்கள் பீஹார் வாக்காளர் திருத்த முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்ற வளாகத்திலிருந்து தேர்தல் ஆணைய அலுவலகம் வரை ஆர்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர்.

இந்த வாக்காளர் பட்டியலை திரும்ப பெற வேண்டும் என்று உறுப்பினர்கள் கோரினார்கள்.

காங்கிரஸ் தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே
மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு.ராகுல் காந்தி,
திமுகவின் திரு.டி.ஆர்.பாலு,
சமாஜ்வாதி கட்சி தலைவர் திரு.அகிலேஷ் யாதவ்,
திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் டெரக் ஓபரேய்ன் உள்ளிட்டோர் இந்த ஆர்பாட்டத்தில் பங்கேற்றனர்.

*********

பூபேந்தர் யாதவ்

வன விலங்கு வசிப்பிடங்கள் மேம்பாடு மற்றும் மேலாண்மைக்காக மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் உரிய நிதி உதவி அளிப்பதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அமைச்சர் அருகி வரும் விலங்கின பட்டியலில் உள்ள 24 விலங்கினங்களை அரசு பாதுகாத்து பராமரிப்பதாக குறிப்பிட்டார்.

மனித - விலங்கின மோதல்களை குறைக்க யானை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிலையான செயலாக்க முறைகள் வகுக்கப்பட்டுள்ளதாக கூறிய அமைச்சர் மாநிலங்கள் இதனை செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

*********

தர்மேந்திர பிரதான்

இந்நிலையில் புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சரும் பிஜேபி மூத்த தலைவருமான திரு.தர்மேந்திர பிரதான் நாட்டின் தேர்தல் நடைமுறைகளுக்கு எதிராக காங்கிரஸ் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

வாக்காளர் பட்டியலை திருத்துவது ஒரு வழக்கமான நடைமுறையே என்று அவர் குறிப்பிட்டார்.

தேர்தலில் தொடர் தோல்வி காரணமாக காங்கிரஸ் கட்சியின் அரசியல் வெற்றிடமாகி உள்ளதாக குறிப்பிட்டார்.

*********

முதலமைச்சர்

பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டத்தில் வாய்க்கால் தூர்வாரும் பணிகளுக்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

திருப்பூரில் ஆயிரத்து 426 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசின் வளர்ச்சி திட்ட பணிகளை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 புதிய தடுப்பணைகள் அமைக்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளை வெளியிட்டார்.

தொடர்ந்து கோவையில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டத்திற்கு காரணமான தலைவர்களின் திருவுருவ சிலையையும் நினைவரங்கையும் முதலமைச்சர் திறந்துவைத்தார்.

இந்த திட்டம் தொடர்பான காணொலி கண்காட்சியையும் முதலமைச்சர் பார்வையிட்டார்.

*********

கோவி செழியன்

தமிழ்நாட்டில் நடப்பு கல்வியாண்டிற்கான முதுகலை கல்வியியல் மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்ப பதிவு இன்று தொடங்குகிறது.

சென்னையில் இன்று இதனை தெரிவித்த மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் வரும் 20ஆம் தேதிவரை 6 அரசு கல்லூரிகளில் 300 இடங்களுக்கு, சேர்க்கை இதன்மூலம் நடைபெறும் என்றார்.

தர வரிசை பட்டியல் வரும் 25ஆம் தேதி வெளியிடப்படும் எனவும்,

26 ஆம் தேதிமுதல் 29ஆம் தேதிவரை சேர்க்கை நடைபெறும் எனவும் கூறினார்.

முதலாம் ஆண்டு வகுப்புகள் அடுத்த மாதம் 1ஆம் தேதி தொடங்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

*********

மதிவேந்தன்

தமிழ்நாட்டில் பட்டியல் இன மற்றும் பழங்குடியின மக்களின் நலனுக்காக அரசு பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருவதாக இத்துறைக்கான அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நலத்துறையால் செயல்படுத்தப்படும் திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து கள ஆய்வு மேற்கொண்ட அவர் பொதுமக்கள் முகாம்கள் மூலம் பெறப்படும் மனுக்கள் மீது முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

வாய்ஸ்

*********

உதயநிதி ஸ்டாலின்

போதை பொருள் இல்லா தமிழ்நாட்டை உருவாக்க துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தலைமையில் பெருந்திரள் உறுதிமொழி சென்னையில் இன்று ஏற்கப்பட்டது.

தொடர்ந்து காணொலி வாயிலாக மதுரை, சிவகங்கை, அரிலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஆட்சித்தலைவர்கள் தலைமையில் உறுதி மொழி ஏற்கப்பட்டது.

*********

ரகுபதி

தமிழ்நாட்டில் போதை பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக மாநில இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு.ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் உயர்நீதிமன்ற அனுமதிபெற்று மாநிலத்தில் தங்கு தடையின்றி மணல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

*********

அனிதா ராதாகிருஷ்ணன்

தமிழ்நாட்டில் மீனவர் நலனை காப்பதில் அரசு அக்கறையுடன் செயல்படுவதாக மாநில மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ராதாகிருஷ்ண் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், மீனவர்களுக்கு நாட்டு படகுகளை இயக்க மானிய விலையில் மண்ணெண்ணை உள்ளிட்ட பல்வேறு நல திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாகவும் கூறினார்.

*********

அன்பில் மகேஷ் - சரவணன்

திருச்சியில் வேளாண்துறை சார்பிலான மாவட்ட சிறுதானிய திருவிழாவை மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வி.சரவணன், மாவட்டத்தில், நெல் சாகுபடிக்கு அடுத்தபடியாக, சோளம், கம்பு ஆகியவை 64 ஆயிரத்து 200 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்படுவதாக குறிப்பிட்டார்.

----- வாய்ஸ் -----

*********

சிவகங்கை

சிவகங்கை மாவட்டத்தில் அரசின் திட்டப்பணிகளை சட்டப்பேரவை உறுதிமொழி குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளை இக்குழுவினர் ஆய்வு செய்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*********

நாமக்கல் கரடி

கொல்லிமலை பகுதியில் கரடி நடமாட்டம் காணப்படுவதால் நாமக்கல் திருச்சி எல்லை பகுதியில் அமைந்துள்ள புளியஞ்சோலை பகுதிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல இரண்டாவது நாளாக இன்றும் தடை நீடிப்பதாக எமது நாமக்கல் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*********

குடற்புழு நீக்க முகாம்

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 2-ம் கட்ட தேசிய குடற்புழு நீக்க முகாம் இன்று நடைபெறுகிறது.

ரத்தசோகை தடுப்பு மாத்திரைகளும் இம்முகாமில் வழங்கப்படுகின்றன.

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு பள்ளிகளில் நடைபெறும் இம்முகாமை முறையாக பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

*********

மீனவர்கள்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள ராமேஸ்வரம் மீனவர்களை விடுவிக்க கோரி மீனவர்கள் இன்றுமுதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்காரணமாக 700க்கும் மேற்பட்ட விசைபடகுகள் கடலுக்குள் செல்லாமல் கரையோரங்களில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

*********

வானிலை

மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் நாளைமறுநாள் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக விழுப்புரம், கடலூர், தஞ்சை, புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டத்தில், இன்று கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் தெரிவித்துள்ளது.

திருவள்ளூர் ராணிப்பேட்டை நீலகிரி மாவட்டங்களில் நாளை கன மழைக்கான வாய்ப்பு உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

தென் தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா, குமரிக்கடல், பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் வரும் 15ஆம் தேதி வரை மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*********

டென்னிஸ்

பல்கேரியாவில் நடைபெறும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் Aryan Shah – பல்கேரியாவின் Alexander Donski-கை இன்று எதிர்கொள்கிறார்.

*********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது